நாள்.23.03.2026

**அசல் வழக்கு எண். 123/2003**
**பெயர். சேது ராஜன்**

**த.பெ. வெங்கடாசலம்**

**பி.வா.சா.1– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி பொது ஒதிக்கீடு என்று எழுத்துமூலமாக ஆவணங்களிள் அரசாங்கத்திற்கு எழுதிகொடுத்துள்ளார என்றால் இல்லை. வாதியிடத்தில் அப்ரூவல் இல்லமால் எதன் அடிப்படையில் அரசாங்கம் பள்ளி கட்டப்பட்டது என்றால் நகர ஊரமைப்பு துரையால் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவில் பொது ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட இடத்தில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டது. எந்த தேதியில் அரசாங்பள்ளி கட்டி முடிக்கப்பட்டது என்றால் தெரியாது. அரசாங்க பள்ளி இயங்கிகொண்டு இருப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளேன். வழக்கு சொத்தில் பூங்காவிற்கு எத்தனை சதவீதம் ஒதுக்கப்பட்டது என்றால் 3.89 சதவீதம். பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா அமைக்கப்பட்டதா என்றால் ஆமாம். அதற்குன்டான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.4 படி பள்ளிகூடம் நடைப்பெற்றுள்ளது என்றால் ஆமாம். ஆனால் புகைப்படத்தில் காலை 11.30மணி என்று உள்ளது ஆனால் பள்ளிக கூடம் மூடப்பட்டுள்ளது என்றால் எதற்காக மூடப்பட்டுள்ளது என்று தெரியாது. நான் சொல்வது போல் பள்ளிகூடம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் பி.வா.சா.ஆ. 2 படி ஆணையர் நகராட்சி பட்டுக்கோட்டை. பட்டா எந்த வருடம் பி.வா.சா.ஆ. 2 எடுக்கப்பட்டது என்றால் 18.07.2022. நகராட்சி ஆணையர் பெயரில் எதன் அடிப்படையில் மாற்றப்பட்டது என்றால் வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ளதால் வருவாய் ஆவணங்கள் எங்கள் பெயரில் மாற்றப்பட்டது. எத்தனை வருடங்களாக எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் 1982ல் இருந்து. 1982ல் பட்டா மாற்றாமல் ஏன் வழக்கிற்கு பிறகு பட்டா மாற்றப்பட்டது என்றால் கணினியில் பதிவிறக்கம் செய்தது தற்போது தான் ஏற்கனவே வருவாய் ஆவணங்களில் பதிவாகி உள்ளது. வழக்கு சொத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் பள்ளி கூடம் கட்ட தொடங்கினோம் தற்போது பள்ளி கூடம் இறங்கவில்லை நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது ஒதுக்கீட்டீற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தவில்லை என்றால் பள்ளி கூடம் இயங்கி வருகிறது. வாதி வழக்கு சொத்திற்கு எந்த ஒரு எழுத்து

மூலமான தானபத்திரம் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது ஒதிக்கீடு செய்யப்பட்டடு அதில் பள்ளி கூடம் கட்டடப்பட்டுள்ளது. பொது ஒதிக்கீடு என்றாலும் வாதி அதை அரசாங்கத்திற்கு எழுதிகொடுக்கவேண்டும் என்று விதி உள்ளது என்று சொல்கிறார்கள் என்றால் பொது ஒதிக்கீடு என்று ஒதுக்கப்பட்ட இடம் அரசாங்க சொத்து என்று ஒதுக்கப்பட்ட பிறகு பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தலாம். பொது பயன்பாட்டிற்கு என்று சொல்லி வாதி அரசாங்கத்திற்கு எந்த ஒரு தான பத்திரம் எழுதிகொடுக்கவில்லை அப்ரூவலும் பெறவில்லை என்பதால் அவ்வாறு கட்டபட்ட இடத்தை இடித்து வாதிக்கு தரவேண்டும் என்றால் சரியல்ல. பள்ளி இயங்கி வருகிறது மாணவர்கள் நலன் கருதி. வா.சா.ஆ. 2 படி பொது பயன்பாட்டிற்காக எத்தனை சதவீதம் ஒதுக்கப்பட்டது என்றால் 5.65 சதவீதம் பொது பயன்பாட்டிற்கும், 3.89 சதவீதம் பூங்காவிற்கும் மற்றும் 1.47 சதவீதம் கடைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது ஆக கூடுதல் 11.01 சதவீதம் பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டள்ளது. பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 5.65 சதவீததில் தான் பள்ளிக்கூடம் கட்டடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.